(இ) மதுரை மத்திய தொகுதி, பழைய சென்ட்ரல் மார்க்கெட் பகுதியில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

***முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட பழைய சென்ட்ரல் மார்க்கெட் பகுதியில் காலியாக உள்ள இடத்தில், அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்கள் வாகனங்களை நிறுத்த ஏதுவாக பன்னடுக்கு வாகன நிறுத்தகம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட பழைய சென்ட்ரல் மார்க்கெட், மாட்டுத்தாவணி பகுதிக்கு மாற்றப்பட்டதன் காரணமாக நகரின் மையப் பகுதிகளில் இப்போது போக்குவரத்து நெரிசல் சற்று குறைந்துள்ளது. பழைய சென்ட்ரல் மார்க்கெட் பகுதியில் காலியாகவுள்ள இடத்தில், அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்கள், தங்கள் வாகனங்களை நிறுத்த ஏதுவாக பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணிகளை, மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன்* Smart City *திட்டத்தின்கீழ் மேற்கொள்ள 24 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடத்தில் முதல் அடித்தளம் 6,394 சதுர மீட்டர் பரப்பளவிலும், இரண்டாவது அடித்தளம் 6,394 சதுர மீட்டர் பரப்பளவிலும் ஆகமொத்தம் 12,788 சதுர மீட்டர் பரப்பளவில் அமையவுள்ளது. இந்தப் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடத்தில் 118 நான்கு சக்கர வாகனங்களும், 1,601 இரண்டு சக்கர வாகனங்களும் நிறுத்துவதற்கு ஏதுவாக திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு, 13—6—2018 அன்று நடைபெற்ற மாநில அளவிலான உயர்மட்ட வழிகாட்டுதல் குழுவின் ஒப்புதல் அளிக்கப்பட்டு,*

செயலாக்கம் பெற அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அண்ணன் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்களும் இதே கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். கண்டிப்பாக கூடிய விரைவில் டெண்டர் கோரப்பட்டு, விரைவில் இப்பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) காங்கேயம் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், மத்திய புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் கனிம ஆய்வுப் பணியைத் தடுத்து நிறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளக்கோவில் ஒன்றியத்தில் பச்சாபாளையம், வீரசோழபுரம், வள்ளியரைச்சல், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமப் பகுதிகளில், மத்திய அரசின் உத்தரவிற்கிணங்க, மத்திய புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதாக வந்த செய்தியையடுத்து, பொதுமக்கள் மத்தியில் அச்சமும், கவலையும் ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து, நானும், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் 2 ஆம் தேதியன்று சென்றபோது, மக்களுடைய அச்சத்தை உணர்கிற வகையில், மக்கள் பல்வேறு சந்தேகங்களை எழுப்பினார்கள். அதாவது, அந்தப் பகுதியில் சுரங்கம் தோண்டவிருப்பதாகவும், கனிம வளங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளதாகவும், சுரங்கம் தோண்டப்பட்டால் நிலத்தடி நீர், தொழிற்சாலைகள் உள்ளிட்ட வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படும் எனவும் விவசாயப் பெருங்குடி மக்களும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. உ. தனியரசு: *அப்படிப்பட்ட சூழ்நிலையில், மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்குகின்ற வகையில், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் செயல்படுகிற அரசு, அந்தப் பகுதியில் அந்தத் திட்டத்தை ஆய்வு செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்ற வேண்டுதலோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*